SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

## FIRST EXAMINATIONS IN BACHILOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012
HELD IN APRIL / MAY 2013

## BBA 14 (I) – MICRO ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. வரைபடங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

(i) சம உற்பத்தி வளையி.
(ii) எல்லைத் தொழில்நுட்ப பதிலீட்டு வீதம்.
(iii) வரவு செலவுத்திட்ட வளையி.
(iv) விலை நுகர்ச்சி வளையி.
(v) ஏஞ்சல் வளையி.
(vi) காரணி விலை வளையி
(vii) விரிவுப் பாதை.
(viii) சமபயன் வளையியினைப் பயன்படுத்தி நுகர்வோர் சமநிலை.
(ix) மூலதனச் செறிவான தொழில் நுட்பம்.
(x) நிறை போட்டிச் சந்தை ஒன்றின் நிறுவனம் ஒன்றினது குறுங்கால சமநிலை.

(10 X 2 = 20 புள்ளிகள்)

02. (i) "பயனை உச்சப்படுத்தல்" என்பதனால் கருதப்படுவது யாது ?

(03 புள்ளிகள் )

(ii) "மொத்தப்பயன்", "எல்லைப்பயன்" ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

(03 புள்ளிகள்)

(iii) நுகர்வோன் ஒருவனது பயன் சார்பு ஆனது,

$$Tu_{xy} = 200x^2y^2$$

இங்கு X, Y என்பன இரு பொருட்களைக் குறிக்கின்றன.

நுகர்வோனின் வரவு செலவுத்திட்ட வரையறை

$$I = P_x X + P_y Y$$

இங்கு

$P_x$ = $X$ பொருளின் விலை

$P_y$ = $Y$ பொருளின் விலை

I = செலவிடத்தக்க வருமானம்

(அ) X பொருளின் கேள்விச் சார்பினைப் பெறுக.

(04 புள்ளிகள)

(ஆ) கருதுகோள் முறையிலான வருமானங்களைப் பயன்படுத்தி X பொருளுக்கான வருமானக் கேள்வி அட்டவனையைத் தயாரிக்குக.

(02 புள்ளிகள)

(இ) X பொருளின் தன்மை பற்றி நீர் விளக்கிக் கொள்வது யாது ?

(02 புள்ளிகள்)

(ஈ) X, Y பொருட்களின் விலைகள் முறையே 100/- , 50/- எனவும் நுகர்வோனின் வருமானம் ரூபா 1500 எனவும் கருதிக் கொண்டு X, Y ஆகிய இரு பொருட்களினது சமநிலைக கொள்வனவுத் தொகைகளை மதிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(உ) ஏனைய காரணிகள் மாறாத நிலையில், நுகர்வோனின் வருமானம் 2000/- ஆக அதிகரிக்கின்றது எனவும், X பொருளின் விலை அலகிற்கு 50% வீழ்ச்சியடைகின்றது எனக் கருதிக் கொண்டு X, Y பொருட்களின் புதிய கொள்வனவுச் சேர்க்கையை காண்க.

(03 புள்ளிகள)

03. (அ) (i) ஒரு பொருளின் விலை மாற்றம் தொடர்பில் வருமான, பதிலீட்டு விளைவுகளை ஹிக்கிய அணுகு முறையைப் பயன்படுத்தி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள)

(ii) நுகர்வோனினது வருமானமும் X, Y பொருட்களுக்கான விலைகளும் பின்வருமாறு தரப்படுகின்றன..

$I = 2000/-$

$P_x = 100\ /-$

$p_y = 100\ /-$

(அ) வெளிப்படுத்தப்பட்ட விரும்பத் தேர்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் அவனது நுகர்வுத் தெரிவினை தீர்மானிக்குக.

(03 புள்ளிகள்)

(ஆ) X பொருளின் விலை 80/- வாக குறைந்தால் அவனுடைய புதிய நுகர்வத் தெரிவு எவ்வாறு அமையும் ?

(03 புள்ளிகள்)

(ஆ) (i) சம உற்பத்தி வளையியினது பண்புகள் யாவை ?

(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கொப்-டக்ளஸ் உற்பத்திச் சார்பினைக் கருதிக் கொள்க.

$$Q = AL^{\beta_0} K^{\beta_1}$$

பின்வருவனவற்றை பெறுக.

(அ) ஊழியத்தின் சராசரி உற்பத்தி.

(ஆ) முதலின் எல்லை உற்பத்தி

(இ) உற்பத்திக் காரணிகளின் நெகிழ்ச்சி

(ஈ) காரணிகளின் எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம்

(உ) அளவுத்திட்ட விளைவு விதி

(05 புள்ளிகள)

(iii) உத்தம காரணி சேர்க்கையினை வரைபட ரீதியாக விளக்குக.

(02 புள்ளிகள)

04. (i) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் மொத்தச் செலவுச் சார்பு பின்வருமாறு

$$TC = b_0 + b_1Q - b_2Q^2 + b_3Q^3$$

இங்கு Q என்பது வெளியீட்டின் அளவைக் குறிக்கின்றன.
பின்வரும் சார்புகளைப் பெறுக.
TFC, TVC, AFC, AVC, AC, MC

(05 புள்ளிகள)

(ii) "நிறைபோட்டியில் நீண்ட காலத்தில் அசாதரண இலாபம் நீடிப்பதில்லை" விளக்குக.

(03 புள்ளிகள)

(iii) நிறைபோட்டி சந்தையில் நிறுவனம் ஒன்றினது AR = MR = P என நிறுவுக.

(03 புள்ளிகள)

(iv) நிறைபோட்டிச் சந்தையின் கீழ் "விலை ஏற்போர்" என்ற பதத்திலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது ?

(03 புள்ளிகள்)

(v) நிறைபோட்டிச் சந்தை ஒன்றின் நிறுவனம் ஒன்றினது மொத்தவருமானம் (TR), மொத்தச் செலவு (TC) சார்புகள் பின்வருமாறு

TR = PQ
இங்கு,
P = 200/-
Q = வெளியீடு

$$TC = 1000 + 10Q - 0.9Q^2 + 0.04Q^3$$

(அ) நிறுவனத்தினது உத்தம வெளியீட்டு மட்டத்தினைப் பெறுக.

(03 புள்ளிகள)

(ஆ) நிறுவனத்தின் மொத்த இலாபம் / நட்டத்தினை கணிக்குக.

(03 புள்ளிகள)

05.

அ) வருமானம் ஈடுசெய்யப்பட்ட வளையினை மற்றும் மூலதனம் ஈடுசெய்யப்பட்ட வளையினை என்பவற்றினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) சம உற்பத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் உற்பத்திக் காரணியின் விலைமாற்றம் காரணமாக ஏற்படும் மூலதன விளைவு, மொத்த விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றினைப் வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக.



(10 புள்ளிகள்)